From	To	Rice (IN GRAMMES)	Wheat
(1)	(2)	(3)	(4)
26th February 1967.	1st April 1967.	1,200	..
2nd April 1967.	29th April 1967	1,200	400
30th April 1967.	6th May 1967.	1,400	..
9th May 1967.	10th June 1967.	1,400	200
11th June 1967	to-date.	1,400	350 (full)

The full quantum of ration could not be supplied to the card holders since 29th January 1967 because of irregular supply of rice to this area and the reduced allotment of wheat and wheat products received from the Government of India. As the quantum of rations supplied to card holders was not sufficient to meet their weekly needs, a certain amount of open market sales of rice was permitted informally in January and February. The concept of statutory rationing precludes the open market sale of rice. This has been stopped with effect from 11th June 1967, the date with effect from which the full quantum of 1,750 grams of rations are being supplied to the card holders.

Just before the supply of full quantum of ration, was resumed in the statutorily rationed area of Coimbatore, reports were being received by the Government to the effect that organised attempts were being made by anti-social elements to smuggle a sizeable quantity of rice to Kerala State across the Coimbatore-Kerala border. As such clandestine movement of rice to Kerala by black-marketeers would affect the food position in this State, the Government had to take steps to nip this evil in the bud. As permission to allow free movement of rice into the statutorily rationed area of Coimbatore and sell it there, would encourage black-marketeers to import large quantities into Coimbatore on the pretext of looking after the requirements of the citizens of Coimbatore and attempt at smuggling such quantities to Kerala on the sly and such cases were reported to be on the increase, the Government stopped the open market sale of rice to Coimbatore. But there is no restriction for bringing up to ten measures of rice by any person for own consumption. Such a relaxation exists now both in Madras City and Coimbatore. No hardship has been caused by this step to the citizens of Coimbatore by stopping open market sales in Coimbatore since the full quantum of ration is now being supplied.

(எ) கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படாத நாட்களுக்கும் தண்ணீர் தீர்வை வசூல்

திரு. எ. பட்டாபி நாயுடு : சட்டமன்றத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுற கால்வாய்களின் வழியாகப் பாசன வசதி பெறும் நஞ்சை நிலங்களுக்கான தண்ணீர்த் தீர்வை, 1957-ல் இருந்து 1966- வரை, தண்ணீர் விடப்படாத நாட்க

ளுக்கும் சேர்த்து வசூலிக்கப்படுவது பற்றி அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, பின் வரும் விவர அறிக்கையைத் தங்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

1957 நவம்பரில், அதாவது, 1367-ம் பசலியில் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து பாசனத்திற்காக நீர் விடப்பட்டது. வருவாய்த் துறையில் 7—1—1963 தேதியுள்ள 115-ம் எண் அரசு ஆணையில் நன்செய் நிலங்கள் மீது கூடுதலான தீர்வை விதிக்கப்படுவதற்கு அரசு, ஏற்பு அளித்துள்ளது. அத்தகைய கூடுதல் தீர்வை வீதங்களைக் கணக்கிடுவதற்கென இந்த ஆண்டு அடிப்படை ஆண்டாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தீர்வை வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஒரு போக நன்செய் நிலங்கள் ..	ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15.
உடன்பட்டுத் தீர்த்த இருபோக நன்செய் நிலங்கள்.	ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20.
இரு போக நன்செய் நிலங்கள் ..	ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 22·50.

1367-ம் பசலி முதல் (1957 ஜூலை 1-ம் நாள்) இந்தத் தீர்வை வீதங்கள் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன. 1367-ம் பசலி முதல் கூடுதலான நன்செய்த் தீர்வையைச் செலுத்துவது குறித்துச் சில இடர்ப்பாடுகள் இருப்பதாக கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்ட உழவர்கள் 1965-ல் முறையீடு செய்து கொண்டனர். 1963-ல் (1374-ம் பசலியில்) வெளியான ஓர் அறிவிப்பின் மூலம் கூடுதல் தீர்வை விதிக்கப்பட்டிருக்க, 1367-ம் பசலி முதல் அத் தீர்வை வீதங்கள் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன என்பது அவர்களது முறையீடுகளில் ஒன்றாகும். இது குறித்து தர்மபுரி மாவட்டக் கலெக்டருக்கு அறிவிக்கப்பட்டது. 1367-ம் பசலியில் தான் இந்த நீர்த் தேக்கத்திலிருந்து முதன் முதலில் நீர் விடப்பட்டது என்றும், எனவே 1374-ம் பசலியில் (1963-ல்) அறிவிப்பு வெளியான போதிலும், 1367-ம் பசலியிலிருந்து அத்தீர்வையை விதிப்பது சரிதான் என்றும் அவர் கூறியுள்ளார்.

திரு. எ. பட்டாபி நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு கேள்வி கேட்கத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 1367-ஆம் பசலிக்கு விடப்பட்ட தண்ணீரானது சில பகுதிகளுக்குத்தான் பாய்ந்தது. ஆனால், மீதியுள்ள பகுதிகள் 1371-ஆம் பசலி வரையிலும் பாயாமல் இருந்திருக்கின்றன. அப்படியிருக்க, 1371-ஆம் பசலியிலும், 1368-ஆம் பசலியிலும் 1369-ஆம் பசலியிலும் பாயப் படாத நிலங்களுக்கு, 1367-ஆம் பசலியிலிருந்து வசூலிக்கப்படுகிறது. இது நியாயமற்ற முறையாக இருப்பதால், இதைத் தவிர்த்து, அவர்களிடமிருந்து வாங்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதையெல்லாம் கணக்கிட்டு 1367-ஆம் பசலியிலிருந்து தீர்வை விதிப்பது சரிதான் என்ற முடிவுக்கு மாவட்டக் கலெக்டர் அவர்கள் வந்துள்ளார்கள்.

(ஐ) திருப்பூர் அரசினர் மருத்துவ மனையில் போதுமான கட்டில்கள் இன்மையால் நோயாளிகள் கீழே படுக்கவைக்கப்படுதல்

முற்பகல் 11–00

திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் போதுமான கட்டில்கள் இல்லாத காரணத்தால் அங்குள்ள நோயாளிகளைக் கீழே படுக்க வைக்கக் கூடிய நிலைமைபற்றி அவசரமும், முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.